திராவிடத்தால் வாழ்கிறோம்

1236

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்


ராஜீவ் காந்தி அரசின் போஃபர்ஸ் பீரங்கி பேர ஊழல் பற்றி ஆங்கிலப் பத்திரிகைகளில் செய்தி.
‘இந்து’ பத்திரிகையில என்.ராமும் சித்ரா சுப்ரமணியமும் பீரங்கி ஊழல் பற்றி எழுதியிருக்கா?
டெல்லியில அரசியல் மாற்றம் ஏற்படுற அளவுக்கு, போஃபர்ஸ் விவகாரம் வெடிச்சிண்டிருக்கு.
ராஜீவ் காந்தி கேபினட்டில் இருந்த வி.பி.சிங்கையும் வெளியேத்திட்டா.
எதிர்க்கட்சிகளெல்லாம் வி.பி.சிங் தலைமையில ஒண்ணுசேரப் போறாளாம்.
டெல்லியில் கலைஞரை வரவேற்று பேனர்.
ஏழு கட்சிக் கூட்டணி அமையுது.
நம்ம தலைவருக்கு தேசிய அரசியலில் முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கு.
டெல்லியில் உள்ள ஆந்திரா பவனில் கலைஞரை வரவேற்கிறார், என்.டி.ராமராவ்.
வாங்க நண்பரே… உங்கள் அரசியல் அனுபவம் இந்தியாவுக்குத் தேவைப்படுது.

– வாழ்வோம்



கண்கள்

சினிமாக்காரர்கள் என்றால் திறக்கும்; விவசாயிகள் சங்கம் என்றால் மூடும்.

மூளை

‘இன்னுமா இந்த ஊரு நம்மளை நம்புது’ என்று யோசிக்கிறது.

நெற்றி

கொள்கைத்தலைவர் பெரியார் என்று உருட்டிவிட்டு, ஜோதிடர் சொல்படி பொட்டுவெச்ச காலிக்குடம்!

காது

விவசாயிகள், பவர்கட், பாலியல் வன்கொடுமை கதறல்களைக் கேட்க மறுக்கிறது.

மூக்கு

எந்த எம்.எல்.ஏ-வை குதிரை பேரம் நடத்தி விலைக்கு வாங்கலாம் என்று மோப்பம் பிடிக்கிறது.

கைகள்

பொதுக்கூட்டங்களில், பஞ்ச் டயலாக் ‘பாடி லாங்குவேஜ்’ காட்ட மட்டும்.

வாய்

பொதுக்கூட்டத்தில் மட்டும் திறக்கும். பிரஸ்மீட், சட்டசபை என்றால், பிளாஸ்திரிதான்.

வயிறு

சட்டசபையில் சுறுசுறுப்பாகப் பேசும் தி.மு.க. எம்.எல்.ஏ-க்களைப் பார்த்து எரிந்து எரிந்து ஃபயர் விடுகிறது.

கால்கள்

ஒரு காலத்தில் ஆட்டம் போட்டவை, இன்று பத்திரிகையாளர்களைப் பார்த்தாலே ஓட்டமெடுக்கத் துடிக்கின்றன.


NEET UG
NEET-UG 2026
EXAM CANCELLED
PAPER LEAK
Telegram
₹14,000 TO ₹25,000
HACKED

2026 குழப்பங்கள் குளறுபடிகள் தற்கொலைகள்!

நீட் தேர்வில் ஓயாத சர்ச்சைகள் என்ன?

1. வினாத்தாள் கசிவு & தேர்வு ஒத்திவைப்பு
2. கோத்ரா தேர்வு மையத்தில் ஆசிரியர்களே மாணவர்களுக்கு விடைகளை எழுத உதவியது
3. வினாத்தாள் கசிந்ததாக டெலிகிராமில் ₹14,000 முதல் ₹25,000 வரை பணம் வசூல்
4. மாணவர்களை ஏமாற்றிய கும்பல் ராஜஸ்தான், பீகார், குஜராத்தில் கைது
5. 150 மாணவர்களின் விவரங்களை ஹேக் செய்து ரீஃபண்ட் தொகை கையாடல்
6. இருமுறை தேர்வால் மாணவர்கள் பெரும் மன உளைச்சல்
7. கடந்த 37 நாட்களில் நாடு முழுவதும் 12 மாணவர்கள் தற்கொலை

உயிர்க்கொல்லி தேர்வு ஒழிவது எப்போது?

நீட் மறுதேர்வுக்கு அஞ்சி கடந்த 37 நாட்களில் நாடு முழுவதும் 12 மாணவர்கள் தற்கொலை!

ராஜஸ்தான்
22 வயது இளைஞர் நீட் தேர்வு ரத்தானதால் தற்கொலை

டெல்லி
3-வது முறையாக தேர்வு எழுதிவிட்டு நம்பிக்கையோடு காத்திருந்த 20 வயது மாணவி தேர்வு ரத்தான விரக்தியில் தற்கொலை.

உத்தரகாண்ட்
ராணுவ அதிகாரியின் 24 வயது மகள், "இது யாருடைய தவறும் அல்ல, எனது திறமையின்மையே காரணம்" என கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை.

குஜராத்
அகமதாபாத்தில் 17 வயது மாணவர் ஒருவர் 6-வது மாடியில் இருந்து குதித்து தற்கொலை

மத்தியப் பிரதேசம்
மவ்கஞ்ச் மாவட்டத்தில் ‘எனக்கு மீண்டும் நீட் தேர்வு எழுத துணிச்சல் இல்லை’ என கடிதம் எழுதி வைத்துவிட்டு 18 வயது மாணவி தற்கொலை. இந்தூரில் மருத்துவரின் மகள் கட்டடத்தில் இருந்து குதித்து தற்கொலை.

உத்தரப் பிரதேசம்
லக்னோ மற்றும் லக்கிம்பூர் கெரியைச் சேர்ந்த இரு மாணவர்கள் தற்கொலை

மகாராஷ்டிரா
தேர்வு ரத்தால் கடும் மன உளைச்சலுக்கு ஆளான 18 வயது மாணவி தற்கொலை

கோவா
"இனி போட்டித் தேர்வுகளில் பங்கேற்க விரும்பவில்லை" என கடிதம் எழுதிவைத்துவிட்டு 17 வயது ஹாக்கி வீரர் தற்கொலை.

தமிழ்நாடு
கோவையில் 19 வயது மாணவி தற்கொலை. சேலத்திலும் மாணவி ஒருவர் தூக்கிட்டு தற்கொலை.

#BANNEET

தகுதி, தகுதி என்று சொல்லி திணிக்கப்பட்ட #NEET, Question Paper Leak, ஆள்மாறாட்டம், பயிற்சி மையக் கொள்ளை, அச்சுறுத்தும் Exam Hall Frisking என மாபெரும் உயிர் கொல்லும் Scam ஆகியிருக்கிறது. மோசடியான NEET தேர்வை ஒன்றிய அரசு ஒழித்தே ஆக வேண்டும்.

-மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின்

புதிய துளிர்கள் உருவாகிக்கொண்டே இருக்கும்!

தி.மு.கழகத்தின் கொள்கைகளையும் சாதனைகளையும் சமூக ஊடகங்களில், எளிய மக்களுக்குப் புரியும் வகையில் எளிமையாக எடுத்துச்சொல்லி, இயக்கத்திற்குப் பலம் சேர்ப்பவர், அனிச்சம் கனிமொழி. அவருடைய குழுவினர் முன்வைக்கும் கருத்துகள், எதிர்முகாமில் இருப்பவர்களைக்கூட காயப்படுத்தாமல், கனிவோடு சிந்திக்கச்செய்யும் தன்மை கொண்டவை. அந்த இனிய பண்பால், புதிய உறவுகளைக் கழகத்துடன் இணைக்கிறார் என்பதை மெய்ப்பிக்கிறது, அனிச்சம் கனிமொழி அவர்களின் சமீபத்திய சமூக வலைதளப் பதிவு.

“நேற்றுதான் முதன்முதலாகப் பார்க்கிறேன்.

திருப்பூரில் இருக்கும் சித்ரா பார்த்திபன், நான் நேற்று கோயம்புத்தூரில் இருப்பதை அறிந்து வந்து, என்னைப் பார்க்கிறார்.

‘எனக்கு அரசியல் தெரியாது, அதிலேயும் கட்சியினா என்னன்னே தெரியாது. எங்க குடும்பத்துக்கும் அரசியலுக்கும் துளியும் சம்பந்தமே இல்லை. ஆனால், இப்பல்லாம் யாராவது தி.மு.க.வைப் பத்தி ஃபேஸ்புக்கில் பேச மாட்டாங்களானு தேடிப் பார்க்கறேன்… காரணம் நீங்க’ என்றார்.

கட்சித் தோல்விக்குப் பிறகு, ஒரு இல்லத்தரசி தி.மு.க. அனுதாபியாக மாறியிருப்பதைக் கண்டு மகிழ்ந்தபடியே அவரின் கரங்களைப் பற்றுகிறேன். ‘கடந்த 6 மாசமா உங்க வீடியோஸ்லாம் பார்த்துப் பார்த்து நிறைய தெரிஞ்சுக்கிட்டேன். உண்மையில எனக்கு இப்போ தி.மு.க.வ ரொம்ப பிடிக்குது’ என்று கட்டியணைத்தபடியே சொன்னார்.

‘நிறைய எழுதுங்க... எங்களுக்குப் புரியற மாதிரி நிறைய பேசுங்க’ என சித்ரா அக்கா சொன்னபோது, தி.மு.கழகம்ங்கிற வளர்ந்த மரத்தில் இலைகள் விழுந்துகொண்டேதான் இருக்கும். ஆனாலும், புதிய துளிர்கள் உருவாகிக்கொண்டே இருக்கும், சித்ரா அக்காவைப் போல’ என்பது விளங்கியது. அதனால்தானே இத்தனை ஆண்டு காலமும் நிலைத்து நின்று நிழல் தருகிறது தி.மு.கழகம்” என்று உணர்வுபூர்வமாக எழுதியுள்ளார்.

ஃப்ளாஷ்பேக்

‘புல்லட்’ கி.இரமேஷ்

மணவிழாவை நடத்திவைத்த தளபதி!

2018-ஆம் ஆண்டு ஏப்ரல் 22-ஆம் தேதி, இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தலைமையேற்று, எனது மூத்த மகள் வழக்கறிஞர் ஆர்.இராஜலட்சுமி – தி.மனோஜ்பிரபாகர் இணையரின் திருமணத்தை, சிறப்பாக நடத்திவைத்தார்கள். தலைவரும் கழக நிர்வாகிகளும் எனது இல்ல மணவிழா நிகழ்ச்சிக்குத் திரளாக வந்து வாழ்த்தியது, எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் மிகுந்த மனமகிழ்ச்சியை ஏற்படுத்தியது. எனது வாழ்நாளில் மறக்கமுடியாத தருணமாக அமைந்தது.

– ‘புல்லட்’ கி.இரமேஷ்,
பகுதிக் கழகத் துணைச் செயலாளர்,
திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி, சென்னை கிழக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

கருவூலம்

பேரறிஞர் அண்ணாவின் அன்பு!

1950-ஆம் ஆண்டு இறுதியில், கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்ற ராஜாஜி தமிழ்நாடு வந்தபோது அவருக்குக் கழகத்தின் சார்பில், கருப்புக்கொடி காட்டப்பட்டது. சென்னையில், 26 பேர் கைதாகினர். கழகம் தொடங்கி, முதன்முதலில் காங்கிரஸ் ஆட்சியால் கைது செய்யப்பட்டு, சிறைக்கு அனுப்பப்பட்ட முதல் அணியே அதுதான். முதன் முதலாகச் சிறைக்குச் செல்லும் அணி என்பதால், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஓடோடி வந்து, அவர்களுக்குப் பிரியாணி வாங்கிக் கொடுத்து, சிறை அதிகாரியிடம் 10 நிமிடம் அனுமதி பெற்று, அவரே பிரியாணி பொட்டலங்களைப் பிரித்துக் கொடுத்து உண்ணச் செய்து, பிறகு தழுதழுத்த குரலில் வழியனுப்பி வைத்தார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900